DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.198/2009** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW3** |
| **Name** | : | பகீர் முகைதீன் |
| **Father's Name** | : | செய்யது |
| **Village** | : | களக்காடு |
| **Taluk** | : | நாங்குநேரி |
| **Age** | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 11.02.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் களக்காடு வியாசராஜபுரத்தில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்ததில் இருந்து அங்கு தான் இருக்கிறேன். எதற்காக அழைப்பாணை எனக்கு அனுப்பப்பட்டது என்று தெரியும். வாதி முகமது அலி வீட்டிற்கு கீழ்புறம் ஆதம் சாகிப் வீடு உள்ளது. வாதி முகமது அலி வீட்டிற்கும் பிரதிவாதி முகமது சாகிப் வீட்டிற்கும் இடையில் முடுக்கு உள்ளது. வாதி வீட்டிலிருந்து மேற்படி முடுக்கிற்கு செல்ல முடியும்.

வாதி வீட்டின் கீழ்ப்பக்க சுவரில் ஒரு ஜன்னல் உள்ளது. வாதி, பிரதிவாதி மற்றும் நான் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள். ஒரே பகுதியில் நான், வாதி , பிரதிவாதி குடியிருந்து வருகிறோம். நான் வாதி வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் செல்வேன். தற்போது நான் மேல் சொன்ன முடுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. என்ன காரணம் என்பது எனக்கு தெரியாது. வாதி வீட்டின் கீழ்பக்கம் உள்ள முடுக்கிற்கு வாதி வீட்டிலிருந்து இறங்கும் வசதி உள்ளதா என்றால் தற்போது உள்ளதா என்று எனக்கு தெரியாது.

1,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை

என்னுடைய அழைப்பாணையில் எந்த சர்வே எண், எந்த தெரு, எந்த பகுதியில் உள்ள முடுக்கு என்று எனக்கு சொல்லவில்லை. என்னை வாதி தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் சரியல்ல, அழைப்பாணையின் பேரில் வந்தேன்.

அழைப்பாணைக்கு முன்பு வாதி என்னை சந்தித்து அழைப்பாணை வரும் என கூறினாரா என்றால் கூறவில்லை. என்னை கேட்காமல் எனக்கு எதற்கு சாட்சியாக விசாரிக்க அழைப்பாணை அனுப்பினாய் என கேட்டேனா என்றால் கேட்கவில்லை.

அழைப்பாணை யாரால் எனக்கு சார்பு செய்யப்பட்டது என்றால் நீதிமன்றத்தால் எனக்கு சார்பு செய்யப்பட்டது. அழைப்பாணையில் கண்ட முகவரியில் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்பதை காட்ட நான் நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கு வைத்து அழைப்பாணையை பெற்றேன் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து பெற்றேன். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே நடக்கும் வழக்கு பற்றி தெரியுமா என்றால் கேள்விபட்டுள்ளேன். வழக்கு விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

ஆவணங்களின் அடிப்படையில் முடுக்கு யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கீழ்பக்கம் பிரதிவாதி வீடும், மேல்பக்கம் வாதியின் வீடும் உள்ளது என்றால் சரிதான். கீழ்ப்பக்கம் மேல்பக்கத்தை பிரிக்கக்கூடிய சுவர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சுவர் கட்டி 60,70 ஆண்டுகள் இருக்கும் என்றால் இருக்கலாம். எனக்கு 63 வயதாகிறது. நான் SSLC படித்துள்ளேன். சுவருக்கு கீழ்பக்கம் நான் சொல்லும் முடுக்கு பகுதியும் பிரதிவாதியின் வீடும் உள்ளது என்றால் சரிதான்.

முடுக்கு பிரதிவாதியின் அனுபவத்தில் தான் தற்போது உள்ளது என்றால் எனக்கு தெரியாது. யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வாதி எனக்கு வேண்டிய நபர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்அ ளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிறு வயதில் இருந்து மேற்படி முடுக்கில் விளையாண்டதாகவும் பயன்படுத்தியாகவும் சொல்வதற்கு ஆதாரம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. வாதி வீட்டிலிருந்து முடுக்கிற்கு வருவதற்கு எந்த வழியும் கிடையாது என்றால் சரியல்ல. நான் சொல்லும் முடுக்கு பகுதி முடுக்கு பகுதி கிடையாது என்றாலும் அது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.